
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 6 | செப்டம்பர் 1993 | இதழ் 9


வெளியிடுவோர் :

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 5-30—6-30...திருமறை ஆய்வு & கலந்துரையாடல்

வியாழன் : மாலை 7-15—8-30...வேத ஆய்வுவகுப்புகள்

வெள்ளி : மாலை 7-00—9-00...ஜெப ஆராதனை

## இதழின் உள்ளே


1. சவுலின் மனமாற்றம் 1
2. உன்னுடைய இரட்சகர் யார்? 9
3. "தேவனுடைய வழியே சிறந்தது" 14
4. அவர் இன்றும் வாழ்கிறார்! 17
5. பழைய-புதிய ஏற்பாடுகளின் இடைக்காலம் 21

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ

Dharapuram Road, KANGAYAM-638 701, Tamilnadu, India:

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 6 SEPTEMBER—1993 Issue 9


**ஆசிரியவுரை**

## சவுலின் மனமாற்றம்

புதிய ஏற்பாட்டின் திறவுகோல் என்றழைக்கப்படும், சரித்திர புத்தகமாகிய அப்பேஸ்தலர் நடபடிகள், மனமாற்றம் அடைந்தவர்களின் பட்டியலைத் தனக்குள்ளாகக் கொண்டுள்ளது. அவைகளை ஊன்றிப்படித்தால், ஒருவன் எப்படி கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளமுடியும் என்றும், இரட்சிப்பை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

ஆனால், இன்றைக்கு மிகப் பெரும்பாலோர் வசனத்தினின்று வழிவிலகிச் சென்று சம்பந்தமே இல்லாமல் பிதற்றிக் கொண்டு திரிகின்றனர். ஒருவன், தான் ஜெபிக்கும் பொழுது ஒளியைக் கண்டேன் அதன் மூலம் இரட்சிக்கப்பட்டேன் என்றும், வேறொருவன் தூங்கும் பொழுது தரிசனம் கண்டேன் அதன் வாயிலாகக் கர்த்தரை ஏற்றுக் கொண்டேன் என்றும் சொல்கின்றனர். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொல்கின்ற பெரும்பாலோருடைய அனுபவம் இவ்வாறாகவே இன்று உள்ளது. இவர்களெல்லாம் அப்போஸ்தலனாகிய பவுல் எப்படி மனமாற்றப்பட்டார் என்பதைத் தெரிந்து கொண்டால் போதுமான அளவு தெளிவு பெற முடியும்.

முதல் நூற்றாண்டுக் காலத்தில் மிக்க செல்வாக்குள்ள கிறிஸ்தவராக வாழ்ந்தவர் இப்பவுலடியாரே. அக்கால கட்டத்தில் கிறிஸ்துவானவருக்கு அடுத்தபடியாகப் புகழ்க்கொடியை நாட்டிய-

வரும் இவரே. ஆனால் இம்மாபெரும் கிறிஸ்தவர், எப்பொழுதும் கிறிஸ்தவராக இருந்தவர் அல்ல. ஒரு காலத்தில், கிறிஸ்தவர்களை அடித்து நொறுக்கி, கொலைக்கு ஒப்புக்கொடுத்தபடியால், ஆதித் திருச்சபை மக்களுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர். இப்படிப்பட்ட ஒரு மனிதர் எப்படி மனம்மாறினார் எனத் தெரிந்து கொள்வது, நாம் நம்மில் உள்ள அநேக தவறுகளைத் திருத்திக் கொள்ள உதவும்.

பவுல், தர்சு பட்டணத்தில் பிறந்து வளர்ந்தவன். இவருடைய தந்தை ஒரு ரோமப் பிரஜை. அக்காலத்தில் ரோமப் பிரஜைக்கு நிறைய சிலாக்கியங்கள் உண்டு. அச்சிலாக்கியங்களை அனுபவித்து வளர்ந்தவன் தான் பவுல். சவுலின் தர்சுபட்டணத்தில் பெரும்பாலோர் அடிமைகள். ஆனால் பவுலோ தர்சுபட்டணத்தில் மாத்திரம் அல்ல, எருசலேமிலும் சென்று கல்வி கற்கும் பாக்கியம் பெற்றவன். புகழ் பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேலிடம் கல்வி பயின்றது, அவனுடைய கல்விச் சிறப்புக்கு மேலும் மெருகேற்றியது. அக்காலத்தில் பவுல் ஒரு வழக்கறிஞர். மொத்தத்தில் அதிகக் கல்வியும், மிக்க ஞானமும் அவனுக்குச் சொந்தம். உலகக் கல்வியில் மட்டுமல்ல, மார்க்க ரீதியாகவும் அவன் ஒன்றும் சளைத்தவன் அல்ல; மோசேயின் நியாயப் பிரமாணத்தில் வைராக்கியம் காட்டியதன் மூலம், யூதர்களுக்குள் அதிக்கம் செலுத்திய 'பரிசேயர்' பிரிவைச் சேர்ந்தவன்.

சரி. இந்தப் பவுலை நாம் முதன் முதலாக அப்போஸ்தலர் 7:58-ல் சந்திக்கலாம். ஸ்தேவானைக் கல்லெறிந்து கொன்றவர்களின் வஸ்திரங்களை காவல் காத்துக் கொண்டுள்ளான். அவனுடைய அறிமுகமே முகம் சுளிக்கும்படியாக உள்ளது. முதன் முதலாக கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நின்று ஒரு பெரும் சொற்பொழிவு நிகழ்த்துகிறார். இயேசுக் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று ஏற்றுக்கொள்ள பிடிவாதமாக மறுக்கும் யூதர்கள் கூட்டம் பேச்சைக் கேட்கிறது. அவர்களுடைய போலித்தனத்தைத் தோலுரித்துக் காட்டும் அவருடைய வல்லமை நிறைந்த பேச்சு அவர்களை மூர்க்கமடையச் செய்து, பல்லையும் கடிக்க வைத்தது (அப் 7;53). ஸ்தேவனுடைய சொற்கணைகளை மேலும் பொறுக்க முடியாத அக்கோரக் கும்பல், ஸ்தேவானை பட்டணத்துக்குப் புறம்பாக்கி கல்லெறிந்தது. தன் இன்னுயிரை வாங்கிய அந்தப் பாவிகளுக்காக, முழங்காலிட்டு ஜெபித்து, அந்த தேவமனிதன் உயிரை விடுகிறான் (அப். 7:60).

அப் 7:55,-ல் ''தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு'' என உள்ளது. நமதாண்டவர் உயிர்த்தபின், சொல்லப்பட்டுள்ள எல்லா சந்தர்ப்பங்களிலும் இயேசுகிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று தான் காண முடியும். தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் ''நிற்கிறார்'' என்று இந்த ஒரே ஒரு இடத்தில் தான் உள்ளது. ஆம் அந்த தேவமனிதன் ஸ்தேவான், தனக்காகப் பட்ட பாடுகளைக் கண்டு, இயேசுவானவர் எழுந்து நின்று அவைகளை அங்கீகரிக்கிறார். நம்முடைய பாடுகளைப் பார்த்துக் கொண்டிருககிறவரல்ல அவர். மாறாக பாடுகளில் பங்கு கொள்கிறவர் தான் நம்முடையகிறிஸ்து.

சரி, சத்தியத்திற்கு எதிரியாக, நீதிக்குப் பகைவனாக அறிமுகமாகிய சவுல், தொடர்ந்து சபையைப் பாழாக்கும் வேலையைச் செய்கிறார் (அப். 8:3) அப்பொழுது எருசலேமில் இருந்த சபை சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகி இருந்தது (8:1). அதிலும் திருப்தியடையாத சவுல், 150 மைல் தொலைவிலுள்ள தமஸ்கு பட்டணத்திற்குப் போய், அங்கேயும் தன் கைங்காரியத்தைக் காட்ட வேண்டுமென்று விரைகிறார். அப்பொழுது தான் இயேசுக் கிறிஸ்துவால் சந்திக்கப்பட்டு கிறிஸ்தவராக மாறுகிறார் (அப் 9)

இங்கே, ஒரு கேள்வி எழும்புகிறது. இயேசு கிறிஸ்து ஏன் சவுலுக்குத் தரிசனமானார்? அவரை ஒரு அப்போஸ்தலனாக்கும்படிதான். அப் 26:16-18 வசனங்களில் ஒருவன் அப்பேஸ்தலனாயிருக்க கர்த்தருக்கு சாட்சியாக இருக்கவேண்டுமென்று நாம் காண்கிறோம். அதாவது, இயேசு கிறிஸ்து உயிர்த்த பின் அவரைத் தரிசித்தவனாக இருக்க வேண்டும். ஆனால் பவுல் அவரை தரிசித்ததில்லை. அவரை ஒரு முழுமையான அப்போஸ்தலனாக்கும்படியே இயேசுகிறிஸ்து நெடுஞ்சாலையில் அவனை சந்திக்கிறார். அப் 9:15 ல் கர்த்தர் பவுலை ''புறஜாதிகளுக்கும் ......நான் தெரிந்து கொண்ட பாத்திரம்'' என்று விளம்புகிறார். பின்னாளில் கொரிந்தியருக்கு எழுதும் பொழுது தனக்கு தரிசனமானதை இவ்வாறாகப் பவுல் சொல்கிறார். ''எல்லோருக்கும் பின்பு, அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்''. (1கொரி 15:6)

கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டம் என விட்டவர்களின் பட்டியலில் பவுல் முதலிடம் பெறுகிறார். அன்றைக்கு யூதர்கள் மத்தியில் புகழ் பெற்ற கமாலியேலிடம் கல்வி பயின்ற

இவர், அதே யூதர்களால் நிராகரிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவின் பாதத்தின் கீழ் அமர்ந்து கற்றுக் கொள்ளத் தன்னை ஒப்புக்கொடுக்கிறார் இந்த மாற்றத்தை நாம் சாதாரணமாக எடை போட்டுவிடக் கூடாது. தான் இதுகாறும் கற்றுத் தேர்ந்தவைகள் ஒன்றுமில்லை, தான் செய்தவைகள் எல்லாம் தவறு என்பதை அப்பட்டமாக ஒப்புக்கொள்ள எவ்வளவு நேர்மையும், மனத் தாழ்மையும் வேண்டும் தேவை தெரியுமா? இன்றைக்கு இதில் ஒரு பங்கு நேர்மையும், தாழ்மையும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிற நம்மிடம் இருந்தால் கூட கிறிஸ்தவ உலகத்தில் மலிந்து விட்ட கேடுகளை அகற்றவும், மெய்க் கிறிஸ்தவம் ஓங்கி வளரவும் நாம் ஒவ்வொருவரும் நேசக் கரம் நீட்ட முடியும்.

தாங்கள் செய்வது தவறு என்று வெளிப்படையாகத் தெரிந்த நிலையிலும் அவற்றைத் திருத்திக் கொள்ளக் கிறிஸ்தவ உலகம் தயங்குகிறது. மாறாக, சால்ஜாப்புக்களையும், நொண்டிச்சாக்குகளையும், பொய்யான காரணங்களையும் மலைபோல் அடுக்கும் மக்களை நாம் அன்றாடம் காண்கிறோம். தவற்றை ஒப்புக்கொண்டு வசனத்தின் உண்மையை ஏற்றுக் கொண்டு, பாரம்பரியப் பழக்கங்களை நாம் குழிதோண்டிப் புதைக்காத வரை இரட்சிப்பும், மெய்க் கிறிஸ்தவமும் நமக்கு எட்டாத கனியாகவே இருக்கும். யோசித்து, யோசித்து காலத்தைக் கடத்தவேண்டாம்.

அநேகர், சவுல் இயேசுக்கிறிஸ்துவால் சந்திக்கப்பட்ட மாத்திரத்தில் இரட்சிப்பை பெற்றுக் கொண்டான் என்றும், வழியில் அவனைச் சந்தித்த இயேசுவை விசுவாசித்த பொழுது அவன் இரட்சிக்கப்பட்டான் என்றும் சொல்வதுண்டு. இதில் கிஞ்சித்தும் நியாயம் இல்லை. இவை உண்மையானால், இயேசுகிறிஸ்து ஏன் அவனிடம், ''நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கு உனக்கு சொல்லப்படும்'' என்கிறார் (அப் 9:6) அதாவது யாராவது வந்து அவன் என்ன செய்ய வேண்டுமென்று சொல்ல வேண்டியிருந்தது. அவன் பட்டணத்துக்குச் சென்று மூன்று பகல், மூன்று இரவு புசியாமலும், குடியாமலும் இருந்து ஜெபத்தோடே வேறொருவர் வருகைக்காகக் காத்திருந்தான். இப்பொழுது கர்த்தர் சவுலிடம் பேசாமல், கர்த்தருடைய ஊழியக்காரனாகிய அனனியாவிடம் பேசுகிறார் (அப் 9:10). இங்கு தான் அனனியா பவுலுக்குத் தான் சொல்த வேண்டியதைச் சொல்கிறார், ''இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்'' (அப் 22:16). இவ்விதமாகவே சவுல் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டான்.

சவுல் விசுவாசிக்கவில்லை, மனந்திரும்பவில்லை என்று சொல்கிறீர்களா? தமஸ்கு செல்லும் வழியில் இயேசுகிறிஸ்துவால் சந்திக்கப்பட்ட பொழுதே அவன் விசுவாசித்துவிட்டான். மனந் ரும்பியும் விட்டான். அவரோடு சம்பாஷித்து, ''ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்'' என்று கேட்டபொழுதே அவரை அறிக்கையும் செய்துவிட்டான் என்று கொள்ளமுடியும். இரட்சிப்பின் படிகள் அனைத்தையும் தாண்டித்தான் அவன் கர்த்தருடைய மெய்ப்பிள்ளையாக மாறினான்.

இன்றைக்கு அநேகர் பாவங்கள் போக ஞானஸ்நானம் பெறாமலேயே இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியுமென வாதிடுகின்றனர். அது உண்மையானால் மறுபடியும் அவனுக்கு ஞானஸ்நானம் எதற்கு? ஞானஸ்நானத்தின் மூலம் தான் ஒருவனுடைய பாவங்கள் கழுவப்படும். நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று இருதயத்தில் குத்தப்பட்ட திரளான ஜனங்கள் பேதுருவிடம் கேட்டபொழுது, ''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் **பாவ மன்னிப்புக்கென்று** இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்....'' (அப். 2:38) என்று தான் பேதுரு சொல்கிறார், ஆகவே ஒருவன் ஞானஸ்நானம் பெறும் பொழுது தான் பாவங்களிலிருந்து விடுதலை பெமுடியும். குழப்பம் வேண்டாம்.

இந்த சவுலுடைய மனமாற்றத்திலிருந்து மேலும் சில பாடங்களை நாம் கற்றுக்கொள்ள முடியும்.

## 1) சுவிசேஷத்தின் வல்லமை

கிறிஸ்துவுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் பரம எதிரியாக இருந்தவன் சவுல். கிறிஸ்தவர்களை அழிக்க கங்கணம் கட்டி வேலை செய்தவன். இவனுடைய பெயரைக் கேட்டாலே பயந்து நடுங்கினர் கிறிஸ்தவர்கள் (அப் 9:13). சவுலும் ஒரு காலத்தில் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வான் என்பது யாரும் கனவிலும் நினைத்துப் பார்க்காத ஒன்று. ஆனால் அது நனவாகவே மாறி அதே சுவிசேஷத்திற்கு அடிமையாகிறான். பிரதான பாவியாகிய என்னை மாற்றினார் என்று அவனே ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறான் (I தீமோத் 1:15). கிறிஸ்துவின் அதே நற்செய்திக்கு ஸ்தானாதிபுதியாகவும் மாறினார் (II கொரி. 5:20). தான் அழிக்கத் தேடின அதே விசுவாசத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும் செய்தான் (கலா. 1:23)

இதன் இரகசியம் எங்குள்ளது தெரியுமா? சுவிசேஷமானது இரட்சிப்புண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது (ரோமர் 1:16)

ஆம், கல் மனதையும் கரைக்கும் வல்லமை சுவிசேஷத்திற்கு உண்டு அந்த சுவிசேஷத்தத நாம் ஏற்றுக் கொள்வோம். உலகெங்கும் கொண்டு செல்வோம்.

**நீதியான வாழ்க்கை மட்டும் போதுமானதல்ல.**

இன்று அநேகர், 'எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும்', பிறருக்குத் துன்பம் இழைக்காத வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை - அது தான் மெய்யான இறை வழிபாடாகும் என்று பல சித்தாந்தங்களின் அடிப்படையில் வாழ்ந்து, தங்களைத் தாங்களே திருப்திப் பட்டுக் கொள்கின்றனர். தங்களுக்கு சிறுவயது முதல் கற்றுக் கொடுக்கப்பட்ட நீதிபோதனைகள், கல்வி ஞானத்தின் மூலமாக் கற்றுக் கொண்ட ஒழுக்க நெறிகள், அல்லது போதிக்கப்பட்ட மத வழிபாட்டுக் கொள்கைகள் இவைகளில் உண்மையையும், நேர்மையையுமாய் இருந்தால் அதுவே போதும் என நம்புகின்றனர். ஆனால் இவை அனைத்துமே பொய் என்பதை சவுலுடைய மன மாற்றத்திலிருந்து நாம் காண முடியும்.

பவுல் தன்னைப் பற்றி பிலிப்பி பட்டணத்தாருக்கு எழுதும் பொழுது சொல்வதைக் கவனியுங்கள் ''பக்தி வைராக்கியத்தின் படி சபையைத் துன்பப்படுத்தினவன் நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவன்'' (பிலிப் 3:6) என்று சொல்கிறார். தான் ஏற்றுக்கொண்ட கொள்கையில் உறுதியுள்ளவனாக, பக்தியுள்ளவனாக, நீதிமானாக இருந்தும், தேவனுடைய பார்வையில் அவன் குற்றவாளியாகவே கருதப்பட்டான். நானும் நீங்களும் தேவனுடைய பார்வையில் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? நேர்மையான வாழ்வு மட்டுமே ஒருவனை ஒருபோதும் இரட்சிக்காது. பக்தியும், ஜெபவாழ்க்கையும், தான தர்மமும் கூட போதாது என்பதற்கு கொர்நெலியு ஒரு அருமையான உதாரணம் அல்லவா? (அப் 10:1,2)

நம்முடைய நம்பிக்கையை மனிதர்களின் வழிகளில் வைக்கக் கூடாது. அவைகளின் முடிவு அழிவு (நீதி 14:12) கர்த்தருடைய வசனம் தான் நம்மை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் (யோவா 12:48) அந்த வசனங்கள் சொல்கிறபடி செய்வோம். மோசே அநேக ஆண்டுகளுக்கு முன் சொன்ன ஒரு அருமையான வசனத்தை இந்நேரத்தில் உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். ''இங்கே இந்நாளில் நாம் அவனவன் தன் தன் பார்வைக்கு சரியானதையெல்லாம் செய்கிறதுபோல நீங்கள் செய்யாதிருப்பீர்களாக''! (உபா 12:8)

## ஒருவனுடைய மனசாட்சி தவறாக இருக்க முடியும்

'மனசாட்சி' என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு பெரும் ஈவு. அந்த மனச்சாட்சியை ஒருவன் எப்படி பயிற்றுவிக்கிறானோ அதைப் பொறுத்தே அது அவனை வழிநடத்தும்.

பவுல் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நிற்கும்போது, ''.... எல்லா விஷயங்களிலும் நான் நல் மனசாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன் என்கிறார் (அப் 23:1). அதே நேரத்தில், ''.... இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அனேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன்'' என்றும் கூறுகிறார். (அப் 26:9) அதாவது, தேவனுக்கு விரோதமாய்ப் போர் செய்வது சரி என அவர் மனசாட்சி கூறியது. ஆனால் அவர் செய்தது தவறு என்பதைப் பின்னாளில் உணர்ந்தார்.

ஆக, ஒருவனுக்குள்ளாக இருக்கும் மனசாட்சியே ஒருவனை எப்பொழுதும் நீதியானதைச் செய்யத் தூண்டும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால், மனசாட்சியை தேவ வசனத்தைக் கொண்டு பயிற்றுவிக்கும் பொழுது, அது ஒருவனை நீதியின் பாதையில் செல்லத் தூண்டும். ஆகவே தான், சத்தியத்தை அறியுங்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது (யோவா 8:32, 17:17)

## கிறிஸ்துவுக்காய் வாழ்தல்

ஓர் அற்புதமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு முன்னுதாரணமாகக் காட்ட மிகச் சரியான நபர் பவுலடியார் தான் அவருடைய சிறந்த கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தாரக மந்திரமாக விளங்கியது இந்த வசனம் தான். கொரி 11:18-ல் ''நான் கிறிஸ்துவைப் பின் பற்றுகிறது போல நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்'' வேறு எந்த அப்போஸ்தலருமே துணிந்து ''என்னைப் பின் பற்றுங்கள்'' என்று சொல்ல முடியவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். மற்ற அபபோஸ்தலர்களை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் கிறிஸ்த வாழ்வில் பவுலுக்கிருந்த பற்றுதலைக் காட்டவே சுட்டிக் காட்டிகிறேன்.

மற்றவர்களைக் கிறிஸ்துவண்டையில் கொண்டு வரவே தான் இரட்சிக்கப்பட்டேன் என்பதை முற்றிலும் உணர்ந்திருந்தான், கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்கும் போது விளைவுகளைப்

பற்றி அவர் ஒருபோதும் கவலைப் படவே இல்லை. கவலைப்பட்டிருந்தால், ''கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்'' என்று அவரால் சொல்லியிருந்திருக்க முடியுமா?

இன்றைக்கு கிறிஸ்தவர்களாகிய நாம், கிறிஸ்துவைப் பற்றி, பவுலைப் போல பிரசங்கிக்கிறோமா? இல்லை தானே! I கொரி. 15:58-ம் வசனத்தில் நமக்கு நம்பிக்கையில்லை: இதோ அந்த வசனம். ''ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாய் இருப்பீர்களாக''!

அருமையான நண்பரே, பவுலைப் போல நீங்கள் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறீர்களா? அப்படியானால் பவுலைப் போல, ''ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்'' என்று உங்களைத் தாழ்மைப்படுத்தி கேட்கத் தயாரா? பவுலைப் போல கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிய விருப்பமுண்டா? நீங்களும் அப்படி செய்வீர்களானால் பவுலுக்குக் காத்துக் ''கொண்டிருந்த நீதியின் கிரீடம்'' உங்களுக்கும் காத்துக் கொண்டிருக்கும். நாம் ஒவ்வொருவரும் அதைப் பெற்றுக் கொள்ளத் தேவனுடைய சித்தத்தை நம் வாழ்க்கையில் நிறைவேற்றுவோமாக!

EZS ராஜநாயகம்

## பொன்னைக் காட்டிலும் விசுவாசம் பெரிது

''அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்''

1 பேதுரு 1:7

# உன்னுடைய இரட்சகர் யார்?

தெரிந்தோ, தெரியாமலோ மனிதன் எப்பொழுதும் ஒரு இரட்சகரைத் தேடிக் கொண்டுள்ளான். பிறருடைய இரட்சகர் யார் என்று முடிவில்லாமல் நாம் வியாக்யானம் செய்துகொண்டிருக்கும் பொழுது, நாம் செய்யவேண்டியது யாதெனில், நமது வாழ்க்கையைக் கூர்ந்து பார்த்து, நம்முடைய இரட்சகராக யார் இருக்கிறார் என்று கவனிப்பது அவசியம். கிறிஸ்து தான் நம்முடைய இரட்சகர் என்று நாம் சொல்லிக் கொண்டாலும், நம்முடைய செயல்கள் கிறிஸ்து நமக்கு இரட்சகரும், எஜமானும் அல்ல என்று காட்டலாம். இப்படிப்பட்ட ஒரு நிலை சாத்தியமானதா?

நாம் ஜாக்கிரதையாக இல்லையென்றால், பணம் நம்முடைய தேவனாக இருக்க அனுமதிக்க முடியும். பணத்தை வைத்துக் கொண்டு ஒருவன் வாங்கக் கூடிய பொருட்கள், அதை வைத்திருப்பதால் அவனைச் சுற்றியுள்ளவர்களால் கிடைக்கும் போலியான மரியாதை, இவைகள் பணத்தை வணக்கத்துக்குரிய ஒன்றாக மாற்றலாம். பணமே மோசமானது என்று சொல்ல முடியாது. ஆனால் அதை அதிகமாக நேசித்து, அதுவே பிரதானமானது என நினைத்து, அதற்கு முதல் இடத்தைக் கொடுக்கும் பொழுது பணம் பயங்கரமான ஒன்றாக மாறுகிறது. பவுல் இதைப் பற்றிச் சொல்வதைக் கேளுங்கள். ''போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை, என்பது நிச்சயம். உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி- நீதியையும், தேவ பக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்த குணத்தையும் அடையும்படி நாடு''. (I தீமுத் 6 : 6 - 11) பணமே எல்லாத் தீமைக்கும் வேர் என்று அவர் சொல்லவில்லை. ஆனால் ''**பண ஆசை**'' தான் காரணம் என்பதைக் கவனிக்க வேண்டும். பணத்தை நேசிப்பதும்

பண ஆசையும் ஒன்றோடொன்று இணைந்தவைகள். பண ஆசை உள்ளவன் அந்த ஆசைக்கு ஒரு போதும் எல்லை போட முடியாது. இனிப்போதும்' என்று ஒரு போதும் சொல்லமாட்டார்கள். ஆகவே தான் பண ஆசை ஆபத்தானது என்று சொல்கிறோம். பணத்திற்கு ஆக்கும் சக்தி எவ்வளவுண்டோ அதைவிட 'அழிக்கும்' சக்தி அதிகம் உண்டு. பணம் நம்முடைய எல்லாப் பிரச்னையையும் தீர்த்துவிடும், எல்லாத் தேவைகளையும் கவனித்துக் கொள்ளும் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். ஒரு போதும் அது நடக்காது. நாம் அதற்கு முன் முழங்காலிடுவோமானால் அது நம்மைக் கடைசியில் அழித்து விடும். ஆகவே, பணம் நம்முடைய வாழ்க்கையின் 'இரட்சகராக' மாறும் பயங்கரமான தவற்றை நாம் செய்ய வேண்டாம்.

அடுத்து பொருளாசையை நம்முடைய கடவுளாக, தேவனாக மாற்றிக் கொள்வது. இதுவும் பணத்தோடு சம்பந்தப்பட்ட ஒன்றே இந்த உலகம் வாழ்க்கையை சொகுசாக அனுபவிக்கத் தேவையானவைகள் என்று ஏராளமான பொருள்களை நமக்குக் காட்டி, அதில் மயங்கும்படி செய்து, பரலோகத்தின் தேவனை மறக்கும்படி செய்ய முடியும். உதாரணமாக பலவிதமான ஆடைகள், ஆடம்பர கார்கள், அழகிய வீடுகள், கண்ணுக்கு இனிமை சேர்க்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள், வீடியோக்கள், காமிராக்கள் இப்படி ஏராளமான பொருட்களை இந்த உலகம் காட்ட முடியும். அவைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியாவிட்டால் கூட, நம்முடைய வாழ்க்கையில் அவைகளையே நினைத்து ஏங்கிக் கொண்டிருக்க முடியும். மீண்டும் பவுல் ஒரு அருமையான உண்மையை வெளிப்படுத்துகிறார் பாருங்கள். உலகத்தில் நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம் (I தீமுத் 6:7). உலகப் பிரகாரமான பொருள்களும், அவைகளினால் கிடைக்கும் சௌகரியங்களும் நல்லவைகளே. சொல்லப் போனால் வாழ்க்கைப் பிரச்னையை அவை சுலபமாக்குகிறது. ஆனாலும் அவைகள் உலகப் பிரகாரமானவைகளே. மேலும், அவைகள் நிலையானவைகள் அல்ல. அவைகள் தரும் திருப்தியும் நீண்ட நாட்களுக்கு இருக்காது. நிலையில்லாதவைகளுக்கு அதிக முக்கியத்துவம் தருவது தவறானது. நம்முடைய நன்மைக்கு அவைகளைப் பயன்படுத்துவது நல்லதே ஆனால், அவையே, நம்மை அழிக்க அனுமதித்து விடக் கூடாது.

நம்மில் சிலர், இந்த உலகத்து இன்பங்களுக்கு, வாழ்க்கையில் முதலிடம் கொடுப்பதின் மூலம் அவைகள் நம்முடைய

இரட்சகராகவும், எஜமானாகவும், மாறும்படி செய்து விடு கிறோம். வாழ்க்கைத் தரம் உயரும் பொழுது, அவ்வப்போது சில மாற்றங்களைச் செய்வது நல்லதே. மனதை மகிழ்விக்கும் நிகழ்ச்சிகள், விளையாட்டு, சுற்றுலா, நல்ல உணவு வகைகள் தேவையானதே. நாம் விரும்பும் பொழுது போக்குகளைச் செய்து இன்பமாக இருக்கலாம். ஆனால் எப்பொழுதும் இவைகளெல்லாம் இந்த உலகியல் சம்பந்தப்பட்டதே என்பது நம்முடைய மனதில் பசுமையாக இருக்க வேண்டும் 'வெளுத்ததை எல்லாம் பால்' என்று நினைக்காமல் நல்லது, கெட்டது எவை என்று பிரித்துப் பார்க்கும் அறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். 'அளவுக்கு அதிகமானால் அமிர்தமும் நஞ்சு' என்பார்களே அதைப்போல, சில நல்ல காரியங்களே அதிகமாகச் செய்யும் பொழுது, கெட்டவை களாக மாறும் என்பதை மறந்து விடக் கூடாது. அப்போஸ்தல னாகிய யோவான் இவ்வாறாக நமக்கு நினைப்பூட்டுகிறார். உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவை-களெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்-தினாலுண்டானவைகள். உலகமும்அதின் இச்சையும்ஒழிந்துபோம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (I யோவா 2:15-17). யாக்கோபு ஆசிரியர் கொடுக்கும் எச்சரிப்பையும் பார்ப்போம், "விபச்சாரரே" விப-சாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்பு கிறவன் தேவனுக்குப் பகைவனாகிறான் (யாக் 4:4) இந்த இரண்டு ஆசிரியர்களும் நாம் வாழ்க்கையை அனுபவிக்கக் கூடாது என்றோ, வாழ்க்கையில் சிரித்து மகிழக் கூடாதென்றோ அல்லது மனரம்-மியமாக இருக்கக் கூடாதென்றோ சொல்லவில்லை. தீமையாகத் தோன்றுகிற உலகப்பிரகாரமான காரியங்களைச் செய்யாமலே, நாம் தேவனுக்குப் பிரியமானவர்களாக இருக்க முடியுமென்றே சொல்கிறார்கள். ஆம்' முடியும்.

மனிதனால் உண்டாக்கப்பட்ட படங்கள், சொரூபங்கள், அவைகளுக்கு கற்பனையாக கிறிஸ்து, மரியாள் இப்படி இன்னும் பல பெயர்களை கொடுத்து அவைகளை வணங்கவும் வாய்ப்புண்டு நல்லவைகளை மட்டுமே செய்ய வேண்டுமென்று நமக்கு எண்ணம் இருக்கும்பொழுது, வேத வாக்கியங்கள், படங்கள், சொரூபங்கள் ஆகியவைகளை ஆராதிக்கக் கூடாது என்று தெளிவாகச் சொல்

வதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவனைத் தான் நாம் ஆராதிக்க வேண்டுமேயொழிய தேவன் போலிருக்கும் எதையும் ஆராதிக்கக் கூடாது. கிறிஸ்துவைத் தான் பின்பற்ற வேண்டுமேயொழிய, கிறிஸ்து போலிருக்கும் எதையும், யாரையும் பின்பற்றக் கூடாது ''விக்கிரக ஆராதனைக்கு விலகி ஓடுங்கள்'' என்று பவுல் கூறுகிறார். (I கொரி 10:14) விக்கிரக ஆராதனை மற்ற மாம்சத்தின் கிரியைகளில் ஒன்றாகவே சொல்லப்பட்டுள்ளது. (கலா 6:20) கடைசியாக, ஒருவன் விக்கிரக ஆராதனைக்காரனாக இருந்தால் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளவோ, பரலோகத்திற்குச் செல்லவோ முடியாது. (I கொரி 6:9, வெளி 21:8) வேதாகமம் **ஒரு தேவனைப்** பற்றித் தான் சொல்கிறது. அந்த ஒரே தேவனை மட்டுமே நாம் ஆராதிக்க வேண்டும். (யோவா 4:24)

நாம் சந்திக்கும் வேறொரு அபாயம் யாதெனில், ஒரு வேத ஆசிரியருக்கு ஊழியருக்கு. ஒரு மதத் தலைவருக்கு அதிகமான அன்பு கூட்டுவது. அந்த அன்பு அதிகமாகும் பொழுது, அவர்களை மனித கடவுளாக மாற்றி மனதில் பூஜிக்க ஆரம்பித்து விடுவது. மூப்பர்களுக்குள்ளோ அல்லது சபையில் உள்ள மற்ற முக்கியஸ்தர்களுக்கோ நாம் மரியாதை செலுத்தும் பொழுது, அவர்களை நாம் ஆராதிக்கவோ, அல்லது பூஜிக்கவோ கூடாது. அப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் சரி. ஒருவேளை அருமையான பிரசங்கம் செய்கிறவர்களாக இருக்கலாம். ஒழுக்க சீலர்களாக இருக்கலாம். ஊரறிந்த பக்திமானாக இருக்கலாம். வேதத்தைக் கரைத்து குடித்தவர்களாகவும் இருக்கலாம் எப்படியிருந்தலும் அவர்கள் மனிதர்களே. தவறு செய்யக் கூடிய வாய்ப்புள்ளவர்களே! தொடர்ந்து நாம் ஒருவனுக்குத் தேவையில்லாத மரியாதையைக் கொடுப்பது, அவன் பாவம் செய்வதைக் காண நேரும். அம்மனிதனைப் பின்பற்றுகிறவன் அவன் மூலமாகக் கிடைக்கும் ஏமாற்றத்தினால் ஆவிக்குரிய வாழ்வில் முற்றிலும் பாழ்பட்டு விடாவிட்டால் கூட, ஒரு முடமான, பெலவீனமான நிலைக்கு வந்து விடுவான். நாம் மனிதனைப் பின்பற்றுகிறவர்களாயிராமல், கிறிஸ்துவைப்பின்பற்றுகிறவர்களாயிருக்க வேண்டும், சாத்தானால் கிறிஸ்து சோதிக்கப்படும் பொழுது இவ்விதமாகத் தான் சொன்னார். ''உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்'' (மத் 4:10)

இப்படிப்பட்ட சக்திமிக்க ''தேவர்களை'' பார்த்த பின், உண்மையாக ஜீவிக்கின்ற தேவனையும், நம்முடைய பாவங்களி-

லிருந்து நம்மை இரட்சிக்க, நமக்காக இரத்தம் சிந்தின அவருடைய குமரனிடத்திற்கும் வருவோம். **ஒரே ஒரு இரட்சகர்** என்பது தான் உண்மை நிலை. வேறெந்தப் பொருள்களோ, நபர்களோ நம்மை இரட்சிக்கவோ அல்லது பரலோகத்திற்கு அழைத்துச் செல்லவோ முடியாது. அவைகளால் நிலையாக நமக்கு எதையுமே தரமுடியாது. கிறிஸ்து இதை இவ்விதமாகச் சொல்கிறார். ''.... ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின் பற்றக்கடவன் (லூக் 9:23) மலைப்பிரசங்கத்தில் மறுபடியும் கிறிஸ்து சொல்வதைக் கேளுங்கள். ''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத் 6:33).

நீங்கள் யாரை ஆராதிக்கிறீர்கள்? உங்களுடைய இரட்சகர் யார்? நீங்கள் எதை வேண்டுமானாலும், யாரை வேண்டுமானாலும் ஆராதிக்கலாம். உங்கள் இரட்சகராக நீங்கள் எதை வேண்டுமானாலும், யாரை வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், நீங்கள் அவைகளினின்று உண்மையான தேவனை கண்டு பிடிக்க முடியாது. நீங்கள் ஏற்றுக் கொண்டவைகள் உங்களை இரட்சிக்கவும் செய்யாது. ஒரே ஒரு தேவன் தான் இருக்கிறார் என்பதை நீங்கள் உண்மையாகவே ஏற்றுக் கொள்ள வேண்டும். அவருடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்து தான் மனுக்குலத்தின் உண்மையான இரட்சகர் என்பதை அங்கீகரிக்க வேண்டும். மெய்யான தேவனையும், அவருடைய ஒரே பேறான குமாரனையும் அறிவதற்கு, அவரை விசுவாசியுங்கள். அவருக்குக் கீழ்ப்படியுங்கள். அப்பொழுது தான் நீங்கள் இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்ல முடியும். ஆம் நீங்கள், யாரை இரட்சகராகத் தேடுகிறீர்கள்? அந்த உண்மையை அறிந்து கொள்வதற்கு காலதாமதமாகிவிட்டதே என்று சொல்வதற்கு முன்னால் நீங்கள் உண்மையான இரட்சகரை அறிந்து கொள்ளுங்கள்.

J.C. சேகர்

## சீக்கிரம் முடிவு எடுங்கள்

''...நீங்கள் எந்தமட்டும் இரண்டு இரண்டு நினைவுகளால் குந்திக், குந்தி நடப்பீர்கள். கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்...''

I ராஜா 18:21

**பெண்கள் பகுதி**

# "தேவனுடைய வழியே சிறந்தது"

ஆபிரகாம் ஒரு தேர்ந்த விசுவாசியாக இருந்தபடியால், தேவன் அவனைப் பார்த்துக் கூறும்பொழுது, உன் பிள்ளைகளை யும், உன் வீட்டாரையும் உன் பின்னே வரக் கட்டளையிடு, அவர்கள் கர்த்தருடைய வழியைக் காத்துக் கொண்டு நீதியாக நடக்கட்டும் என்றார். (''நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி ....பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்''.) (ஆதி 12:2,3)

ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கு தேவனுக்கு உண்மை யுள்ளவனாயிருந்தான். அவனுக்கு ஏசா, யாக்கோபு என இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். ஏசா, தேவனை விசுவாசியாத பெண் களை மணந்ததினால், அவனுடைய சந்ததியார் தேவ நம்பிக்கை யற்றவர்களாயிருந்தார்கள். ஆதி 26:35ல் ஏசாவின் விக்கிரக ஆராதனை செய்யும் மனைவிகள், **''அவர்கள் ஈசாக்கிற்கும் ரெபெக்காளுக்கும் மன நோவாயிருந்தார்கள்''** என்று காண்கிறோம். ஆதி 27:46ல் ரெபெக்காள் ஈசாக்கை நோக்கி, **''ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக்கிறது. இந்த தேசத்துப் பெண்களாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு ஒரு பெண்ணைக் கொள்வானானால் என் உயிர் இருந்து ஆவதென்ன''** என்றாள்.

குடும்பமானது, தேவன்மீது விசுவாசத்தைத் தங்கள் இருத-யங்களில் கொண்ட கணவன், மனைவி இவர்களால் கட்டப்பட வேண்டுமென்பதை ரெபெக்காள் உணர்ந்திருந்தாள், வேதாகம சரித்திரத்தில் இது ஒரு முக்கிய அம்சமாகவே விளங்கி வந்துள்-ளது. இன்றைக்கும் கூட பெற்றோர்கள், பிள்ளைகளுக்கு மணம் முடிக்கும்பொழுது, தங்கள் பிள்ளைகள் விசுவாசமுள்ள துணை-யைத் தேர்ந்தெடுக்கும்படியாகப் போதிக்க வேண்டும்.

ரெபெக்காளின் வற்புறுத்தலின் காரணமாகவே யாக்கோபு, ஆரானிலிருக்கிற தன் மாமன் வீட்டிற்கு அனுப்பப்பட்டான். அங்கே அவன் மெய்யான தேவனை ஆராதிக்கும் தன் மாமன் மகளைச் சந்திக்கிறான். அவன் அவளை தாமதமில்லாமல் நேசித்

தான். அந்த அப்பழுக்கற்ற நேசம், அவளுக்காக ஏழு ஆண்டுகள் சேவகம் செய்ய ஒப்புக்கொள்ள வைத்தது ''....**அவள்பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்கு கொஞ்ச நாளாகத் தோன்றினது''** (ஆதி 29:20). அந்த வருஷங்கள் நிறைவேறினபோது, லாபான் ராகேலுக்குப் பதிலாக தனது மூத்த மகளை திருமணத்தின் மூலமாக, தந்திரமான முறையில் அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான்.

சிருஷ்டிப்பின் காலந்தொட்டே, திருமணத்திற்கான தேவனுடைய திட்டம், "ஒருவனுக்கு ஒருத்தி'' என்பதே. ஆதாம், ஏவாள் இவர்களை ஒன்றாக இணைக்கும்பொழுது, தேவன் இவ்விதமாகவே சொன்னார். ''இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தாயையும்விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். (ஆதி 2:24)

அந்நாட்களில். தேவ சித்தத்திற்கு விரோதமாக மனிதன் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை மணந்து கொள்வது ஒரு பொதுவான பழக்கமாகிவிட்டது. இப்பழக்கத்தை தேவன் அங்கீகரித்ததாக எங்கும் பேசாவிட்டாலும், அதை அந்நாட்களில் அவர் சகித்துக் கொள்ளவே செய்தார். யாக்கோபுடைய விஷயத்தில் நாம் பார்த்தால், யாக்கோபு ராகேலை நேசித்து, தெரிந்து கொண்டான். அவளைத் தான் அவன் திருமணம் செய்துகொண்டிருக்க வேண்டும். ஏழு ஆண்டுகள் அவன் அவளுக்காக உண்மையாகப் பாடுபட்டான். மணமகள், தான் விரும்பிய ராகேல் தான் என்று முழுமனதோடு நம்பி திருமணமும் முடித்தான். ஆனால், காலையிலே அவள் லேயாள் என்று அறிந்தான். லாபானை நோக்கி: ஏன் எனக்கு இப்படிச் செய்தீர்? ராகேலுக்காக அல்லவா உம்மிடத்தில் வேலை செய்தேன். பின்னை ஏன் எனக்கு வஞ்சகம் பண்ணினீர் என்கிறான்? (ஆதி 29:25) அதற்கு லாபான் : மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்கமல்ல என்று விளக்கம் கொடுத்தான். லாபான் ராகேலையும் உனக்குத் தருவேன். அவளுக்காக ஏழு வருஷம் வேலை செய் என்று யோசனை சொன்னான்! ராகேலுக்காக, யாக்கோபின் அன்பு அளவில்லாமல் இருந்தபடியால் அந்த யோசனைக்கு அவன் ஒத்துக் கொண்டான்.

இப்படிப் பல தாரங்களை (மனைவிகளை) மணந்து கொள்ளும் பழக்கம் வந்ததன் விளைவு என்ன? ஒரு பெரிய சந்தோஷமான குடும்பம் அமைந்ததா? இல்லை. ''யாக்கோபு லேயாளைக் காட்டிலும் ராகேலை அதிகம் நேசித்தான் என்று நாம் வாசிக்

கிறோம்'' (ஆதி 29:30) முதலில் அவன் ராகேலை விரும்பியதால் இந்தப் பாரபட்சமான அன்பு ஏற்பட்டது இயற்கையே. ஆனால் இது பொறாமையை உண்டு பண்ணியது. ''கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார். இப்பொழுது என் புருஷன் என்னை நேசிப்பார்'' என்ற அவளுடைய புலம்பலான வார்த்தைகள் லேயாள் ஒரு நேசிக்கப்படாத மனைவி என்பதை நமக்குக் காட்டுகிறது. லேயாள் இரண்டாம் குமாரனைப் பெற்று ''....நான் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி, இவனையும் எனக்குத் தந்தார் என்று சொல்கிறாள்'' (ஆதி. 29:33)

''ராகேல் தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டு யாக்கோபுவை நோக்கி: எனக்குப் பிள்ளை கொடு, இல்லாவிட்டால் சாகிறேன் என்றாள்'' (ஆதி 30:1), உணர்ச்சி பொங்கின. வேதனை தரக்கூடிய வார்த்தைகளை இந்த சொந்த சகோதரிகளிடம் நாம் காண்கிறோம்.

காலம் கடந்து செல்லும் பொழுது, இந்த இரண்டு பெண்களும் தங்கள் வேலைக்காரிகளை யாக்கோபுக்குக் கொடுத்து, பிள்ளைகளைத் தங்களுடையதாக்கிக் கொண்டார்கள். இதுகூட அந்தக் கால கட்டத்தின் பழக்கங்களில் ஒன்று. இறுதியாக, ராகேல் யாக்கோபுக்குப் பிரியமான மகன் யோசேப்பைப் பெற்றுக் கொடுத்தாள். சில வருடங்கள் கழித்து யாக்கோபின் கடைசி மகனான பென்யமினைப் பெறும்பொழுது, ராகேல் மரித்துப் போனாள் பதின் மூன்று குழந்தைகளும், லேயாள், ராகேல் ஆகிய இரு மனைவிகளும் அடங்கிய யாக்கோப்பின் குடும்ப வாழ்க்கையை நாம் கூர்ந்து கவனித்தால், தேவனுடைய விருப்பத்திற்கு மாறான பலதாரம், பாரபட்சம், பொறாமை, போட்டி இவைகளையே காண முடியும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிரந்தரமாக இருந்ததா என்றால், இல்லையென்பதே பதில். ஒற்றுமையற்ற மனைவிகள் தங்களை கணவன் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்? பொறாமை குணம் கொண்ட தாய்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தான் என்ன ஒழுக்கத்தைப் போதித்திருக்க முடியும்?

ஆதியாகமத்தின் பிற் பகுதியை நாம் வாசிக்கும் பொழுது அவை நம்முடைய உணர்வுகளைக் கிளறக் கூடியதாகவே உள்ளது. சஞ்சலமும், கண்ணீருமே அவர்கள் இறுதி நாட்களின் சொத்து. இவைகள் நமக்கு உணர்த்தும் பாடம், தேவனுடைய வழியே எப்போதும் சிறந்தது என்பதே. ஆகவே, தேவனுடை வழியை ஏற்றுக் கொள்வோம் கீழ்ப்படிவோம்,

B. B. CHOATE R.R. NAYAGAM

# அவர் இன்றும் வாழ்கிறார்!

வேதாகமம் உரிமை கொண்டாடுவதைப் போல, மரித்தோரிலிருந்து இயேசு கிறிஸ்து மூன்றாவது நாள் உயிர்த்தெழுந்தார் என்றால், அவர் உரிமை கொண்டாடுவதைப் போல அவர் தேவனுடைய குமாரன் (மத். 16 : 18). அவர் உலக இரட்சகர் (யோ. 3 : 16 , 17). பரலோகத்திற்கு செல்லவேண்டி, அவருடைய கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்படியவேண்டும். (எபி, 5; 8: 6),

## எதிரிகளின் ஒப்புதல்

எந்த ஒரு நீதி மன்றத்திலும் சாட்சிகளின் கூற்றுக்கு அதி முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நம்ப முடியாத விதத்தில், இயேசுவின் எதிரிகள் கூட அவர் உயிர்த்ததை ஒப்புக்கொள்ளுகின்றனர். இதோ சில உதாரணங்கள்,

1. **காவலர்கள் :** பிரதான ஆசிரியரிடம் காவல் சேவகர்கள் தெரிவித்தது என்ன? a) கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்து ; b) வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளினான்; c) அவன் வஸ்திரம் உறைந்த மழையைப் போல வெண்மையாக இருந்தது; d) அவனுக்குப் பயந்ததினால் காவலர்கள் செத்தவர்கள் போல் ஆயினர்; e) தூதன் அந்த ஸ்திரிகளை நோக்கி: இயேசு உயிர்த் தெழுந்தார் என்றான். (மத். 28 : 1-6 ; 11),

2. **பெந்தெகொஸ்தே நாளில் :** அன்றைய நாளிலே நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தவர்களிலும் சிலர் கிறிஸ்துவை சிலுவையில் அறையக் காரணமாயிருந்தனர், (அப். 2: 36 - 41). அவர்கள் அவரைக் கொன்ற போதிலும், மரித்தோரிலிருந்து அவரைத்தேவன் எழுப்பினார் என்பதை அவர்கள் சந்தேகமற ஏற்றுக்கொண்டனர்

3. **பவுல் :** தர்சு பட்டணத்து சவுலைப் (பவுல்) போல, வேறு யூதன் எவனும் கிறிஸ்தவத்தை அவ்வளவு வெறி கொண்டு தாக்கியதில்லை இன்னும் கர்த்தருடைய சீடரைப் பயமுறுத்தி கொலை செய்யும்படி சீறினான் என அவனைப் பற்றி லூக்கா கூறினார். (அப். 9 : 9).

என்ற போதிலும், இந்த முந்தைய எதிரி (பவுல்) நமது இரட்சகர் உயிர்த்ததை உண்மையென உணர்ந்து திருப்தி அடைகிறான். (அப் 9 22, 26) ; பாவ மன்னிப்புக் கென்று கிறிஸ்துவுக்குள் அவன் ஞானஸ்நானம் பெறுகிறான். (அப், 22 : 19)

உயிர்த்த இரட்சகரை நேரிடை சாட்சிகளுடன்கூட அவன் நிரூபிக்கிறான் (I கொரி. 15:1-8).

## அந்த சடலத்திற்கு ஏற்பட்ட கதி என்ன?

கிறிஸ்தவம் மோசடியான ஒரு கொள்கையின்மேல் கட்டப்பட்டிருந்தால், இயேசுவின் சரீரத்தை மலைக்கோவிலுக்கு அந்த யூதர்கள் எடுத்துச் சென்று அந்த இயக்கத்தையே ஏன் முற்றிலுமாக அழிக்கவில்லை? அவர்களால் அது முடியவில்லை. ஏனெனில் அவருடைய சடலம் அவர்களிடம் இல்லை! அவர்களிடம் இருந்திருப்பின் நிச்சயமாக அந்த உடலைக் கொண்டுவந்து அம்பலப்படுத்தியிருப்பார்களே!

சடலத்தை திருடுவதற்கு மாறாக, எதிரிகள் அதற்குக் காவல் இருந்தனர். அவர்கள்:

1. கல்லறைக்கு முத்திரை இட்டனர் (மத். 28; 62-68)
2. அங்கு காவல் வைத்தனர் (மத் 27:62-66)
3. உலகிலேயே பிரபலமான ரோமக் காவலர்கள், ஆறு மணிக்கு ஒரு முறை காவல்களை மாற்றினர்.
4. காவலில் தூங்கினாலோ, கைதியை தப்ப விட்டாலோ அவர்களுக்கு மரணதண்டனை காத்திருந்தது (அப்.12:19).
5. ஒரே சமயத்தில் 16 சிறப்புக் காவலர்கள் இயேசுவின் சடலத்தைக் காத்து வந்தனர் (அப். 12:4)
6. சீடர்கள் விரும்பியிருந்தாலும்கூட, அந்த சடலத்தை மீட்டிருக்க முடியாது!
7. மறுபக்கம் வழியாக குழி தோண்டியோ, குடைந்தெடுத்தோ அந்த சடலத்தை மீட்டிருக்க முடியாது; ஏனெனில் அது கடினமான பாறையாக இருந்தது. (மத். 27:60)!
8. சடலத்தை திருடும் எண்ணமே சீடர்களுக்கு எழவில்லை.
   a) ஏனெனில் மீண்டும் அதற்கு உயிரளிக்க அவர்களால் இயலாது.
   b) அவருடைய சிலுவை மரணத்திற்குப் பின்னர் அவர்கள் சிதறிப் போனார்கள். பேதுரு மீன்பிடிக்கக்கூட போய்விட்டான். (யோ. 21:3)
9. சடலத்தை சீடர்கள் திருடியதாக அவர்களை எதிர்த்து

எதிரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏனெனில் அது அவர்களிடம் இல்லை என்பது தெரியும். (மத். 28: 11-15)!

ஆக, அந்த சரீரத்திற்கு என்ன தான் ஆயிற்று?

எதிரிகளிடம் அது இல்லை; சீடர்களிடமும் இல்லை; கல்லறையிலேயே இருப்பதாகக் கூறி கிறிஸ்தவத்தை அழிக்கவும் முடியவில்லை; மரித்தோரிலிருந்து தேவன் அவரை எழுப்பினார் என்ற ஒரே விளக்கமே அதற்கு விடையாகும்! அவர் இன்னும் வாழ்கிறார்!

## நேரிடைச் சாட்சிகள்

கொரிந்து சபை பலப்படுத்தப்பட வேண்டியதாயிருந்தது. அங்கு தலைதூக்கி நின்ற பிரிவினைகளும் வாதங்களும் சீடர்களை பலவீனப்படுத்தியது.

மரித்தோரிலிருந்து இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை பவுல் அவர்களுக்கு நினைவூட்டினான். அவர் உயிர்த்தெழுந்ததைக் கண்ட நேரிடைச் சாட்சிகளை அவன் குறிப்பிடுகிறான். (I கொரி. 15:3-7)

1. கேபா (I கொரி. 15:5)
2. பன்னிருவர் (I கொரி. 15;5)
3. ஒரே சமயத்தில் 500 சகோதரர்கள் (I கொரி. 15:6)
4. யாக்கோபு (I கொரி. 15:7)
5. எல்லா அப்போஸ்தலர்கள் (I கொரி. 15:8)
6. பவுலுக்கும் தரிசனமானார் (கொரி. 15:8)

அந்த 500 சகோதரர்களில் பலர் இன்னும் உயிரோடிருந்தனர் (I கொரி 15:6) இதெல்லாம் மோசடி வேலை எனக்கூறக் கூடிய ஒரே ஒரு சாட்சியைக்கூட கொரிந்தியர்கள் கொண்டுவந்து ஏன் நிறுத்தவில்லை? அது அவர்களால் முடியாது. மேற்கூறிய எல்லா நேரிடை சாட்சிகளின் பட்டியலும் மிகக் கவனமாகத் தயாரிக்கப்பட்டு கொரிந்தியருக்கு தரப்பட்டது எவ்வாறு?

ஏனெனில் கிறிஸ்துவின் உயிர்ப்பு உண்மை! அவர் இன்னும் வாழ்கிறார்!

## இறுதியாக

இத்துடன் சாட்சிகள் தீர்ந்து போய்விடவில்லை, இன்னும் நாம் சோதித்துப் பார்க்கலாம்: 1. தீர்க்கதரிசனங்களின் நிறை-

வேற்றம்; 2. சிலுவை மரணத்தின்போது சிதறுண்டு போன சீடர்கள், உயிர்ப்புக்குப்பின் திரும்பிய சம்பவங்கள்; 3. சீடர்களின் ஒருமித்த சாட்சியங்கள்; 4. புதிய ஏற்பாட்டின் நீதிகளின் தாக்கத்திற்கு எதிர்ப்பின்மை; 5. புதிய ஏற்பாட்டின் கற்பனைகளின் வலிமைக்கு எதிர்ப்பு எதுவும் இல்லை.

இந்த பட்டியலை இன்னும் நீட்டிக் கொண்டே போகலாம். இயேசு இன்றும் வாழ்கிறார். அவர் மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார், உயிர்த்தெழுந்தார் (I கொரி. 15;1-4). மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, ஞானஸ்நானத்தின் வழியாக உயிர்த்தெழுவோர் அவருடையவராகின்றனர் (ரோமர் 6:3-7; கலா. 3:27). நீங்கள் அவருடையவரா? நீங்கள் இயேசுவுக்குச் சொந்தமானவரா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா?

Steve Hale

தமிழில்: எஸ்.எஸ். ராஜன்

## பிள்ளைகளே! பெற்றோர்களின் ஆலோசனைகளை அற்பமாய் எண்ணாதீர்கள்

''என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக் கொள். உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே.

அவைகளை எப்பொழுதும் உன் இருதயத்திலே அணிந்து, அவைகளை உன் கழுத்திலே கட்டிக் கொள்.

நீ நடக்கும்போது, அது உனக்கு வழிகாட்டும்; நீ படுக்கும் போது அது உன்னைக் காப்பாற்றும்; நீ விழிக்கும் போது அது உன்னோடே சம்பாஷிக்கும்.

கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், சிட்சையே ஜீவ வழி''.

# பழைய-புதிய ஏற்பாடுகளின்

# இடைக்காலம்

புதிய ஏற்பாடு மொழி இனம் எல்லாம் கடந்து, உலகில் வாழும் எல்லா மனிதருக்காகவும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. புதிய ஏற்பாடு போதிக்கும் சத்திய மார்க்கம் உடல் மார்க்கம் அல்ல! அது ஆன்ம மார்க்கமே. இவ் வேறுபாட்டை உணராமல் இன்றைய கிறிஸ்தவம் கொள்கை அளவில் ஒற்றுமையைவிட பிரிவினையைப் போதித்துக் கொண்டு இருக்கிறது!

நான் உங்களுக்கு புதிய ஏற்பாட்டை அறிமுகப்படுத்துகின்ற வேளையில், பழைய புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலம் ஒன்றினை நீங்கள் அறிந்திட வேண்டும். பழைய ஏற்பாட்டின் கடைசி தீர்க்கதரிசி மல்கியா முதல் கிறிஸ்து வரைக்கும் சுமார் 400 ஆண்டுகளுக்கு ஆவியினால் ஏவப்பட்டு பேசும் ஓர் தீர்க்க தரிசி எழும்பவில்லை! என்பது கவனிக்கத்தக்கது. இந்த 400 ஆண்டு காலகட்டத்தை அறிஞர்கள் அமைதிக் காலம் என்பர் (Silent Period) யூதர்கள், நெகமியா எஸ்றா போன்ற தலைவர்களுடன் பாபிலோனின் 70 ஆண்டு சிறை இருப்புக்குப் பின் எருசலேமுக்கு திரும்பி இருந்தனர். அவர்கள் சிறையிருப்பு நாட்களில் பட்ட துன்பங்கள் அனுபவித்த அவமானங்கள், கட்டாயப் படுத்தப்பட்ட விக்கிரக ஆராதனைகள், அவர்கள் நெஞ்சில் மாறாத வடுக்களாக அமைந்தன! அதன் எதிரொலியாக மிகுந்த பக்தியுடன் நியாயப் பிரமாணத்துக்குரிய தீர்க்க தரிசனத்தில் உரைக்கப்பட்ட மேசியாவை எந்நேரமும் எதிர்பார்த்து கொண்டு இருந்தனர்!

இக்கால அரசியல் உலகத்தை நாம் நோக்கினால் அசீரிய, பாரசீக ஆட்சிகளுக்குப் பின் மத்தியதரை நாடுகள் கிரேக்க ஆட்சியின் கீழே வந்தது (336 கி.மு.) மகா அலெக்சாண்டரை (Alexynder the great) நாம் அறிவோம் அல்லவா? அக்காலத்தில் உலக அரங்கில் கல்வி, கலாச்சாரம், வாணிபம், விஞ்ஞானம், வானசாஸ்திரம், மருத்துவம், கட்டிடக்கலை, அரசியல் போன்ற துறைகள் வளர்ச்சி பெற்றது! கிரேக்கப் பேரரசின் அஸ்தமன நாட்களில் மெக்கபேயர்கள் (Maccabean) என்பவர்கள் தலைமையில்

மிகப் பெரிய அரசியல்-கலகம் யூதர்களின் தாய்நாட்டு விடுதலைப் போராட்டம் ஏற்பட்டது. (கி.மு. 168) இக்கால வரலாற்றை கத்தோலிக்கர் தங்கள் பழைய ஏற்பாடு புத்தகத்தில் இணைத்து கொண்டுள்ளனர். (Apocrypha)

பின்பு கிரேக்கப் பேரரசை ரோமர் ஒடுக்கி உலகப்பேரரசை நிறுவினர். (கி.மு. 147) ரோமர்கள் பெரும் தீனிக்காரர்களும் போர்க்குணமுடையவர்களாகவும் இருந்தனர். அடிமைத்தன (Slavery) ஆட்சி, அடிமைத்தன அமைப்பு, ஆகியவைகள் அவர்களுக்கு கைவந்த கலை! ஏறக்குறைய அன்றைய சுமார் 50 விழுக்காடு உலகம் அடிமை நிலையில் இருந்தது. பொன்னும் பொருளும் பாலஸ்தீனத்தில் மண்டிக் கிடக்கும் கனிவளங்களும் ரோமர்களின் கண்ணை உறுத்தியது. ஆகவே எருசலேம் முற்றிகையிடப்பட்டு ரோமர் கைவசம் வந்தது. ஜூலியஸ் சீசர் (Julius ceasar) ஏரோது (Herod) அகஸ்தியஸ் (Augustus) போன்ற மன்னர்களை நாம் அறிவோம் அல்லவா? அவர்கள் யூதர்களை அடிமைப் படுத்தி ஆட்சி செலுத்தி வந்தனர்.

இக்காலத்தில் யூதர்கள் கொத்தடிமைகளாக சொல்லொணா துன்பம் அடைந்து வந்தார்கள். "யெகோவாவிற்கு (தேவன்) பிரியமாய் இருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்தினால் தாங்கள்படும் உபவத்திரங்களை பக்தியாகவும்" மூடப்பழக்கங்களாகவும் பாரம்பரிய வழிபாடுகளாகவும் (Tradition)" மாற்றிக் கொண்டனர் ஊருக்கு ஊர் ஜெப ஆலயங்கள் ஏற்படுத்தப்பட்டது. (Synagogue) யூதர்கள் மத்தியில் நம்பிக்கை, பக்தி சூழ் நிலை ரீதியாக பல்வேறு பிரிவினைச் சித்தாந்தங்கள் தோன்றலாயின.

**பரிசேயர்**

பரிசுத்தவான்களாக (Separated one) மோசேயின் நியாயப் பிரமாணத்தை சரியாகக் கைகொள்ள வேண்டும் என்ற பிரிவினர்கள் இவர்கள். "தொடுதல்" "தீண்டுதல்" "ருசி பார்த்தல்" நியாயப்பிரமாணத்தின் போர்வையில் தங்களை வெளிப்பார்வைக்கு பக்தர்களாக காட்டிக் கொண்டனர்? இவர்களே பரிசேயர் (The Pharisees) ஆவர். நம் ஆண்டவர் எவ்விதம் அவர்களை கடிந்து கொண்டார் என அறிவோம்! மத் 15;3-8); மத் 23-ம் அதிகாரம் காண்க. இவர்களில் நிக்கதோமு (Nicodemus)

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு (Joseph of Arima. . .) காமாலியேல் (Gamalial) தரிசு பட்டணத்தானாகிய சவுல் (Saul of Tarasus) ஆகியவர்கள் மிகப் பிரபலமானவர்கள்.

**சதுசேயர்**

இவர்கள் அரசியல் வாதிகள் எனலாம். யூத தலைமைப் பீடத் (high priest-hood) தின் மீது மோகம் கொண்டு ரோமர்களுக்கு ஆதவராக ஒரு சமயத்திலும் யூதர்களுக்கு ஆதரவாக மற்றொரு சமயத்திலும் நடந்து வந்தனர். இவர்கள் சாதனையாளர்கள். ஆகவே இவர்களை சாதிக்கும் சேயர்கள் எனலாம்! (The Saddusees) இவர்கள் உயிர்த்தெழுதல் (Resurrection) ஆவிகள், (Spirits) தூதர்கள் (Angels) முதலியவற்றை நம்பாதவர்கள், மாற் 12:18, லூக் 20:278, அப் 23:8 வாசிக்கவும்.

**வேதபாரகர்**

இந்த பிரிவினர் தங்களை பாபிலோனிய சிறை இருப்புக்கு முன், தீர்க்கதரிசியாகிய எரேமியாவின் உதவியாளனாக இருந்த பாருக்குடன் (Baruch) தங்கள் வம்சாவழியை ஒப்பிட்டுக் கொண்டு பழைய ஏற்பாட்டை 'பிரதி எடுத்து விற்பது' மற்றும் தொழில் ரீதியாக எழுத்தராக (SCRIBE) செயல் படுவதுமாக இருந்தனர்.

**பாவிகள்**

இந்த நான்காம் பிரிவினர் மிகப் பெரிய சமுதாயமாக வாழ்ந்தனர்! இவர்கள் மற்ற பிரிவினர்களால் தாழ்ந்தவர்களாக கருதப்பட்டனர். இவர்களின் சித்தாந்தம் எல்லாம் ''ஏதோ என்னால் முடிந்தது! ''என் மனச்சாட்சிக்குத் தெரியும்'' மரத்தை வைத்தவன் தண்ணீர் ஊற்ற மாட்டானா! பாவமோ புண்ணியமோ, நரகமோ, மோட்சமோ, எதிர்காலத்தை யார் கண்டது? என்று நாம் இன்று வாழவில்லையா? அதைப் போன்றே இம்மக்களும் நிர்விசாரமான வாழ்க்கை வாழ்ந்து சமுதாயத்தால் பாவிகள் என அழைக்கப்பட்டனர். (Sinner) நியாயப்பிரமாண சட்ட வரம்புக்குள் வராதவர்கள். வறுமைக் கோட்டுக்கும் கீழ் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள்.

ரோமர் :3,10—23, ரோ. 6;23, ரோ 7;24,

**பழைய ஏற்பாடும் இயேசு கிறிஸ்தும்**

இக்கால கட்டத்தில் தான் தேவனுடைய குமாரனும் மானிடரின் இரட்சகருமாகிய இயேசு பிறந்து அவர் நாசரேத்து ஊரில் வளர்ந்ததினாலே நசரேனாகிய இயேசு என அழைக்கப் பட்டார். மத் 1:24 தமது 30வது வயதில் யோவான் ஸ்நானகனாலே திரு முழுகுப் பெற்றார். மத் 3:13, 16, அது முதல் இயேசு பரலோக இராஜ்ஜியம் சமீபித்து இருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். மத் 4:17 பரலோக ராஜ்ஜியம் வருவதாக என வேண்டுதல் செய்தார். மத் 6:10 இராஜ்ஜியம் அவருடைய நாட்களில் வரும் என்று சொன்னார். மாற் 9:1. அந்த ராஜ்ஜியம் சபை என்றும் அதை தாம் காட்டுவதாகவும் கூறினார். மத் 16:18. தமது இரஜ்ஜியம் இவ்வுலகத்துக்குரியது அல்ல என்று பிலாத்து விடம் கூறினார். யோவான் 18:36. மேலும் இந்த இரஜ்ஜியம் உலகம் உண்டானது • முதல் பிதாவினால் ஆயாத்தமாக்கப்பட்ட இரஜ்ஜியம் என்கிறார். மத் 25:34 இந்த ராஜ்ஜியத்தில் ஒருவர் அங்கத்தினராகுவதற்கு, மறுபடியும் பிறக்க வேண்டும் என்கிறார். யோ : 3:5

மேற்சொன்ன வசனக் குறிப்புகளை நாம் ஆராயும் பொழுது பழைய ஏற்பாட்டு பூமிக்குரிய இராஜ்ஜிய அமைப்பான ஆபிரகாம் சந்ததியான இஸ்ரவேலருக்கு வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தைப் போன்றது அல்ல. கிறிஸ்துவானவர் அறிவித்த ராஜ்ஜியமோ உலகத்தின் நான்கு எல்லைகளையும் தொட்டு நிற்கிறது. (மாற் 16:15 கொலோ 1:23) அப்படியானால் நிச்சயமாக கிறிஸ்துவின் போதனைகள் ஆவிக்குரிய ஓர் ராஜ்ஜியத்தையே நமக்கு காண்பிக்கிறது. ஆகவே மத்தேயு 5:17- இல் நியாயபிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதுக்கு வந்தேன் என்று எண்ணதேயுங்கள், அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுவதற்கே வந்தேன் என்றார். அப்படியானால் மோசே முதல் சுமார் 1500 ஆண்டுகள் இஸ்ரவேலர்களை மட்டும் ஆட்சி செய்து வந்த பழைய ஏற்பாட்டை தமது சிலுவை மரணத்தினால் நிறைவேற்றி ஓர் புதிய ஆவிக்குரிய ஏற்பாட்டை உலகில் வாழும் அனைவரோடும் அவர் ஏற்படுத்தியிருக்கிறார் என்பது தெளிவு ஆகிறது. அதனால் அன்றோ அவர் உயிர்தெழுந்த பிறகு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்

பட்டு இருக்கிறது என்றார் மத் 28 : 18 ஆகையால் நீங்கள் உலக முழுவதும் புறப்பட்டு போங்கள் என அப்போஸ்தலருக்கு கட்டளையிட்டார். அதாவது பிறப்பினால் பழைய ஏற்பாட்டை பின்பற்றி வந்த இஸ்ரவேலர்களை மட்டும் அல்ல இவ்வுலகத்தில் தேவன் அற்றவர்களாகவும் இயற்கை வணக்கக்காரரும், விக்கிர ஆராதனைக்காரரும் யாவரோடும் தேவனுக்கு கீழ்படியும் பொழுது அவர்களுடன் புதிய உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. அப்படியானால் பழைய ஏற்பாடு மாற்றப்பட்டுள்ளது.

## புதிய ஏற்பாடு அமுலாக்கப்பட்டுள்ளது

அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால் இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டியதில்லையே. அவர்களைக் குற்றப்படுத்தி அவர்களை நோக்கி இதோ கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில் இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கை ஏற்படுத்துங் காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வரும் படிக்கு நான் அவர்களுடைய கையை பிடித்த நாளிலே ''அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப் போல இது இருப்பதில்லை; அந்த உடன் படிக்கையிலே அவர்கள் நிலை நிற்கவில்லையே; நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்: அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன் படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவர்களின் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் அப்போது சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள், ஆகையால் கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும் ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டுவதில்லை. ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார். பழமையானதும் நாள் பட்டது மாயிருக்கிறது' உருவழிந்து போகக் காலம் சமீபத்திருக்கிறது; எபிரெயர் 8 : 7-13 என்று வாசிக்கிறோம்

அப்படியானால் பழைய ஏற்பாடு எங்கே எவ்விதம் நீக்கப்பட்டுள்ளது.

நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரித்துக்கொண்டு வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றிச்சிறந்தார் கொலோ 2: 14-15

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன், ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல! கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாமிசத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைதாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன், நான் தேவனுடைய கிருபையை விருதா வாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்து வீணாயிருக்குமே: கலா 2.20 ; 21

இனி நமக்கு நியாயபிரமாணம் தேவைதானா? நியாயப்பிரமாண கிரியைக்காரர்கள் கிறிஸ்துவுடன் ஐக்கியமாக இல்லை. நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் கலா; 5;4

கிறிஸ்து தமது புதிய ஏற்பாட்டை அமுலாக்கிவிட்டார்! அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து அவர்களை நோக்கி; வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் ஆமென். மத்தேயு 28: 18-20

புதியஏற்பாடு தேவனுக்கு கீழ்படிகிறயாவரையும் ஆளுகின்றது: இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யவும் அறிக்கை பண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே; நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும் பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்: பிலி: 2: 10-12.

**பாவமன்னிப்பின் சட்டம் :**

பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்- வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி• மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும்புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோசமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள், அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். அப்போஸ்தலர் 2:38-42

**முடிவுரை :**

தேவன் ஒருவரே,தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லோரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது. இதற்காகவே நான்

பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும். புறஜாதிகளுக்கு விசுவாசத்தையும் சத்தியத்தையும் விளங்கப்பண்ணுகிற போதகனாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறேன்; நான் பொய் சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன், I தீமோ 2:5-7

இப்படியிருக்க, பழைய ஏற்பாடாகிய நியாயப் பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருபவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்த மாட்டாது. எபிரெயர் 10:1

ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். இதைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக்குச்சாட்சி சொல்லுகிறார். எப்படியெனில் அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்தப்பின், அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதாக சொல்லுகிறார். இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால் இனி பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்பட வேண்டியதில்லையே! எபிரெயர் : 10:14 :18. அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப பிணையாளியானார்; எபி 7: 22.

மேற்படி வசன ஆதாரங்களால் பழைய ஏற்பாடு, கிறிஸ்துவின் மரணத்தில் நிறைவேறி, புதிய ஏற்பாடு, கிறிஸ்துவின் உயிர்தெழுதலால் அமுலாக்கப்பட்டுள்ளது, என அறியலாம்.

**பீட்டர் சாலமேன்**

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi-11004.
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1:00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2:15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004,
Sundays 1 :45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20. MM. ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

**வேண்டுவோர் தொடர்பு கொள்க:**

E.Z.S. ராஜநாயகம்
*கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,*
*காங்கயம் - 638 701*

Published by Church of Christ Kangayam and Printed at Jeevasakthi Press, Erode.
Editor. E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No. 27 KANGAYAM-638 701